FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 13 (2020) | கர்நாடக சங்கீதம் I | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. ஆரோகணமும் அவரோகணமும் வக்ரமாயுள்ள இராகம்
1) ஸகானா 2) கமாஸ் 3) ஸ்ரீராகம் 4) அஸாவேரி 5) ஸாரங்க

02. "உன்மையன்றி" என்ற ஆதி தாள வர்ணத்தை இயற்றியவர்.
1) உரைநாடு நடேசபிள்ளை 2) பத்மாவீரராகவன் 3) பாபநாசம்சிவன்
4) ஸ்ரீஜெயதேவர் 5) லால்குடிஜெயராமன்

03. திருப்பதி அன்னமாச்சாரியார் தெலுங்கு மொழியில் இராகமாலிகையாக இயற்றிய உருப்படி யாது?
1) வர்ணம் 2) சூளாதி 3) அஷ்டபதி 4) தில்லானா 5) ஜாவளி

04. திருக்குறுந்தொகை பாடப்படும் இராகம்.
1) ஹரிகாம்போதி 2) மத்தியமாவதி 3) மோகனம்
4) பூர்விகல்யாணி 5) பைரவி

05. "நீ போய் அழைத்துவாடி" என்ன வகை உருப்படி.
1) கீர்த்தனை 2) தில்லானா 3) வர்ணம் 4) பதம் 5) இராகமாலிகை

06. யுத்தகளத்தில் பயன்படுத்தப்படும் வாத்தியம்.
1) ரணபேரி 2) கும்மடி 3) குடமுழா 4) திருச்சின்னம் 5) தமுக்கு

07. சங்கீர்ணஜாதி மட்டியதாளம் மிஸ்ரகதிபேதம் அடைவதினால் தோன்றும் மொத்த எண்ணிக்கை.
1) 180 2) 108 3) 117 4) 100 5) 140

08. மேலைத்தேய இசையில் F SHARP க்கு ஒப்பாக கர்நாடக இசையில் குறிப்பிடப்படும் ஸ்வரஸ்தானம்.
1) சுத்தமத்திமம் 2) சதுஸ்ருதி தைவதம் 3) காகலி நிஷாதம்
4) பிரதிமத்திமம் 5) சுத்ததைவதம்

09. "மாதர் மடப்பிடியும்" என்னும் தேவாரத்தில் நடைபேதத்துடன் பாடப்படும் வரி.
1) பத்துதலை தத்தக்கணைதொடு 2) செவிடு, குருடு வடிவு குறைவு
3) எழில் பொழில் குயில்பயில் 4) பூத இனப்படைநின்றிசை
5) தாதவிழ் புன்னைமயங்கு

10. ஸரிகுமபதிநி என்னும் ஸ்வரசங்கேத அட்சரங்கள் குறிக்கும் இராகம்.
1) கரகரப்பிரியா 2) தீரசங்கராபரணம் 3) மேசகல்யாணி
4) வாசஸ்பதி 5) ஹரிகாம்போதி

11. கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை ஆகிய இரு இசை வகைகளுக்கும் பொதுவான உருப்படிகள்.
1) தில்லானா, க்ருதி 2) தில்லானா, கீர்த்தனை 3) தில்லானா, ஜாவளி
4) ஜாவளி, கீர்த்தனை 5) பதம், க்ருதி

12. ஓர் இசை உருப்படியின் பொருத்தமான இடத்தில் அந்த சாகித்தியத்தின் இராகபாவம், பொருள் நயம் விளங்கும் படியாகப் பல்வேறு பிரஸ்தாரங்களில் பாடப்படும் மனோதர்ம பகுதி
1) இராகம் 2) தானம் 3) பல்லவி 4) நிரவல் 5) கற்பனாஸ்வரம்

13. தென்னிந்தியாவில் ஓதுவார்களின் தேவாரத்திற்கு பக்க வாத்தியமாக வாசிக்கப்பட்ட வாத்தியம்.
1) தபேலா 2) ஸாரங்கி 3) சிதார் 4) வீணை 5) வயலின்

14. தஞ்சை துளஜா மகாராஜாவால் எழுதப்பட்ட நூல்.
1) சதுர்த்தண்டி பிரகாசிகை 2) சங்கிரக சூடாமணி 3) சங்கீத சாராம்கு
4) சங்கீத சுதாகரம் 5) சங்கீத சம்பிரதாய பிரதர்சினி

15. ஸரிஸதாத என்ற முறையில் இசைக்கருவிகளில் வாசிக்கப்படும் கமகம்.
1) ஸ்புரிதம் 2) ஆந்தோனிதம் 3) பிரக்தியாகதம்
4) ஆகதம் 5) திரிபுச்சம்

16. இரண்டு மத்திமங்களையும் எடுத்துக் கொள்ளும் இராகம்.
1) கல்யாணி 2) கானடா 3) ஹிந்துஸ்தான்காபி
4) ஹமீர்கல்யாணி 5) பைரவி

17. 14 மாத்திரைகளைக் கொண்ட தாளம்.
1) திரிதால் 2) ஜப்தால் 3) தாதரா 4) தீப்சந்தி 5) பாஷ்டோ

18. " பாரத ரத்னா" என்ற விருதை இந்திய மத்திய அரசிடம் இருந்து பெற்றவர்.
1) N.வீரமணிஐயர் 2) S.உருத்திராபதி 3) M.S.சுப்புலட்சுமி
4) N.சண்முகரட்ணம் 5) M.L. வசந்தகுமாரி

19. சாரங்கியில் அனுதாபத்தந்திகள்
1) 35 – 40 2) 30 – 40 3) 25 – 40 4) 20 – 30 5) 35 – 45

20. மெண்டலின் இசையை வெகுசிறப்பாக கர்நாடக இசையில் வாசித்து சிறப்புப் பெற்றவர்.
1) N.வீரமணிஐயர் 2) பு.ஸ்ரீனிவாஸ் 3) சுப்ராமா தீட்சதர்
4) S.ராதாகிருஷ்ணன் 5) பாலமுரளி

21. நாத நாமக்கிரியா இராகத்திற்கு ஒப்பான பண்.
1) புறநீர்மை 2) முல்லை 3) சீகாமரம்
4) காந்தாரபஞ்சமம் 5) கொல்லி

22. ஹிந்துஸ்தான் இசையில் ஷாடவ இராகம் என அழைக்கப்பட்டது.
1) மார்வா 2) யமன் 3) பிலாவல் 4) பூபாள 5) பூப்

23. பைரவி இராகத்திற்கு பண்டைத்தமிழிசையில் வழங்கப்பட்ட பெயர்.
1) கொல்லி 2) காந்தார பஞ்சமம் 3) பழம்பஞ்சுரம்
4) கௌசிகம் 5) செந்துருத்தி

24. அடதாள வர்ணத்தில் ஒரு ஆவர்த்தனத்தில் இடம் பெறும் அட்சரங்கள்.
1) 56 2) 32 3) 36 4) 14 5) 45

25. கனபஞ்சக இராகங்களுள் தீர சங்கராபரணத்தின் ஜன்யமான இராகம்.
1) நாட்டை 2) கௌளை 3) ஆரபி 4) ஸ்ரீ 5) வராளி

26. பாக் இயற்றிய பிரபல்யமான ஆக்கங்களில் ஒன்று.
1) Massin B - Minor
2) A comparative study of music
3) Lafinta Giardiniera
4) To The memory of a A Great man
5) The magic flute

27. காவடிச்சிந்தின் தந்தை எனப்படுவர்.
1) A.M.சின்னசாமி முதலியார் 2) S. இராமநாதன் 3) G.N. பாலசுப்பிரமணியம்
4) அண்ணாமலைச் செட்டியார் 5) M. M. தண்டபாணி தேசிகர்

28. உஸ்தான் அல்லாரக்காகான் முகமது அகமதுகான் ஆகியோரால் வாசித்து பிரபல்யமான வாத்தியம்.
1) தபேலா 2) ஸாரங்கி 3) பியானோ 4) கெஞ்சிரா 5) கடம்

29. கர்நாடக ஹிந்துஸ்தானி இசைக்கலைஞர்கள் தம் தம் இசைக்குரிய பக்க வாத்தியத்துடன் ஒரே மேடையில் மாறி மாறிப்பாடுதல்.
1) கச்சேரி 2) குழ இசை 3) பல்லியகச்சேரி
4) கூட்டிசை 5) ஜுகல்பந்தி

30. கல்விக் கூடங்களில் இசையை ஒரு பாடமாக புகுத்தி இன்று வரை சிறப்பாகப் பயின்று வருவதற்கு பெரும் பங்காற்றியவர்.
1) புரந்தரதாஸர் 2) பாபநாசம்சிவன் 3) வேங்கடமகி
4) P. சாம்பமூர்த்தி 5) க்ஷேத்ரக்ஞர்

31. 67 வது மேளத்தின் சுத்தமத்திம மேள எண்ணிற்குரிய இராகம்.
1) ராகவர்த்தனி 2) காங்கேயபூஷனி 3) யாகப்ரியா
4) நாகானந்தினி 5) சூளனி

32. "திருப்பாவைமணி" எனும் பட்டத்தைப் பெற்றவர்.
1) M.L. வஸந்தகுமாரி 2) வீணைபாலச்சந்தர் 3) இராஜரத்தினம்பிள்ளை
4) M.S. சுப்புலட்சுமி 5) P. சாம்பமூர்த்தி

33. "கயான் உதேஜாக் மண்டலி" என்ற இசைச்சங்கத்தில் சேர்ந்து இசை உலகிலேயே தன் வாழ்நாட்களைக் கழித்தவர்.
1) அமீர்குஸ்ரு 2) பாத்கண்டே 3) பாக்
4) மொசாட் 4) பீதோவான்

34. 72 மேளகர்த்தா இராகங்கள் அனைத்தையும் வரிசைக் கிரமமாக 12 இசைத்தட்டுக்களில் வாசித்து வெளியிட்டவர்.
1) எம்.எல்.வசந்தகுமாரி 2) வீணைபாலசுந்தர் 3) பாலமுரளி கிருஷ்ணா
4) வேங்கடமகி 5) M.S. சுப்புலட்சுமி

35. நாரதர் தமது சங்கீத மகரந்தம் என்னும் நூலில் எத்தனை வகையான கமகங்களைக் குறிப்பிட்டுள்ளார்.
1) 15 2) 7 3) 12 4) 19 5) 10

36. ஹிந்துஸ்தானி இசையில் இருந்து வந்த தாளம்.
1) 175 தாளம் 2) 35 தாளம் 3) தேசாதி தாளம்
4) சாபுதாளம் 5) ஸப்ததாளம்

37. விஜயராகவ பஞ்சரத்னம் என்னும் ஐந்து பதங்களை இயற்றியவர்.
1) முத்துத்தாண்டவர் 2) கோபாலகிருஷ்ண பாரதியார்
3) பைடால குருமூர்த்தி சாஸ்திரி 4) வேங்கடமகி 5) க்ஷேத்ரக்ஞர்

38. திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை நடித்த திரைப்படம்.
1) சகுந்தலை 2) கவிகாளமேகம் 3) நிஜமா
4) ரிஷ்யசிருங்கர் 5) மீரா

39. வெவ்வேறு இடங்களுக்கு எடுத்துச் சென்று வாசிக்கக்கூடிய வாத்தியம்.
1) ஸ்திரவாத்தியம் 2) கச்சேரிவாத்தியம் 3) சரவாத்தியம்
4) ஸாதக வாத்தியம் 5) ஸகலவாத்தியம்

40. ''தீம்னனன தில்லில்லான'' என்னும் தில்லானா அமைந்த இராகம்.
1) மோகனம் 2) ஜனரஞ்சரி 3) பிருந்தாவனி
4) ஹம்சத்வனி 5) கானடா

41. ஸரிகமபதநிஸ் - ஸ்தபமரிஸ என்னும் ஆரோகண அவரோகணத்தையுடைய இராகம்.
1) வசந்தா 2) பந்துவராளி 3) மோகனம்
4) ஜனரஞ்சனி 5) பிருந்தாவனி

42. ''நவரஸநாயகா'' என அழைக்கப்படுபவர்.
1) ஸ்வாதித்திருநாள் மகாராஜா 2) அருணகிரிநாதர்
3) பைடால குருமூர்த்தி சாஸ்திரி 4) புரந்தரதாஸர் 5) முத்துத்தாண்டவர்

43. இராகாங்க இராகம் எனப்படுவது.
1) பாஷாங்க ராகம் 2) சேய்ராகம் 3) உபாங்கராகம்
4) வர்ஜராகம் 5) தாய்ராகம்

44. ''ஒரு பொழுதும்'' என்ற திருப்புகழ் அமைந்த தாளம்.
1) ஆதி 2) ரூபகம் 3) திஸ்ரதிரிபுடை
4) சங்கீர்ண ஜம்பை 5) மட்டியதாளம்

45. இசைக்கருவிகளை வாசிக்கும் போது ஐந்துவிரல்களை பயன்படுத்தும் முறையை அறிமுகப்படுத்தியவர்.
1) மொசாட் 2) பாக் 3) பாத்கண்டே 4) அமீர்குஸ்ரூ 5) தான்சேன்

46. ''வீடவாலவாயிலாய்'' என்னும் தேவாரம் பாடப்பட்ட தலம்.
1) திருவாலவாய் 2) திருவீழிமிழலை 3) திருவாரூர்
4) திருவாவினன் குடி 5) திருவண்ணாமலை

47. ''காந்தார பஞ்சமம்'' என்பதற்கு இணையான இராகம்.
1) சங்கராபரணம் 2) ஹரிகாம்போதி 3) மாயாமளவகௌளை
4) மோகனம் 5) கேதாரகௌளை

48. பதம் என்ற உருப்படி வகையின் சிற்பி என அழைக்கப்படுபவர்.
1) தாண்டவர் 2) ஹேத்ரக்ஞர் 3) பாபகாசம்சிவன்
4) புரந்தரதாஸர் 5) சியாமாசாஸ்திரி

49. தவி அன்னியஸ்வர பாஷாங்கராகத்திற்கு ஓர் உதாரணம்.
1) பிலஹரி 2) கமாஸ் 3) சாராங்கா
4) அடானா 5) ஹிந்துஸ்தான்காபி

50. தனது 7 வது வயதில் வியன்னாவில் வாசித்த மேலைத்தேய வாக்கேயகாரர்.
1) தான்சேன் 2) பாக் 3) மொசாட் 4) பாத்கண்டே 5) அமீர்குஸ்ரூ

(50X2=100 புள்ளிகள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, மார்ச் - 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, March - 2020

| தரம் :- 13 (2020) | கர்நாடக சங்கீதம் II | நேரம் :- மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி II

❖ **"அ" பகுதியில் உள்ள எல்லா வினாக்களுக்கும் "ஆ" பகுதியில் இருந்து இரு வினாவிற்கும் "இ" பகுதியில் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### "அ" பகுதி

01. 1) 72 மேளகர்த்தாச் சக்கரத்தின் விவாதி தோஷமற்ற மேளங்களின் எண்ணிக்கை யாது?
2) தெலுங்கில் இராக தாள மாலிகையாக சூளாதியை இயற்றியவர்?
3) ஜாவளி எத்தனையாம் நூற்றாண்டு இயற்றப்பட்டது?
4) சமஷ்டி சரணம் அமைந்த கிருதிகளில் இடம் பெறாத அங்கம் யாது?
5) ஜதி, ஸ்வரம், வார்த்தைகளைக் கொண்டு அமைந்த உருப்படி யாது?
6) ஆனந்த பைரவி இராகத்தில் வரும் அன்னியஸ்வரம் யாது?
7) வட இந்தியாவில் "கஞ்சரி" என அழைக்கப்பட்ட வாத்தியம் யாது?
8) "கோபிகா மனோஹரம்" என்னும் கீர்த்தனையின் இராகம் யாது?
9) ஒரு இராகத்தைப்பாடும் பொழுது இடையிடையே முடிவும் ஸ்வரம் எவ்வாறு அழைப்பர்?
10) ஒரே நேர்கோட்டில் எழுதப்படும் கர்நாடக சங்கீத லிபி முறையை எவ்வாறு அழைப்பர்?
11) ஸ்வாதித்திருநாள் மகாராஜர்வின் முத்திரைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
12) த்வீதிய கனபஞ்சராகம் இரண்டு குறிப்பிடுக.
13) கோட்டுவாத்தியம் வாசித்து பிரபல்யம் பெற்ற இருவர் பெயர் தருக?
14) அமீர் குஸ்ருவினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய உருப்படி வகைகள் இரண்டு தருக.
15) தாது – மாது சம்பந்தமான அணிகள் இரண்டு தருக.

### "ஆ" பகுதி

02. 1) கமகம் என்பதன் வரைவிலக்கணத்தைக் கூறுக?
2) கமகம் பற்றி கூறும் இரு நூல்களைக் குறிப்பிடுக.
3) தசவிதகமகங்களைத் தருக?
4) அவற்றுள் ஐந்தினை உதாரணத்துடன் விளக்குக?

03. 1) தேவாரம் என்பதன் பொருள் யாது?
2) தேவார முதலிகள் ஒவ்வொருவரினதும் தேவாரங்களுக்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர்கள் ஒவ்வொன்று தருக?
3) சம்பந்தர் பாடிய தேவாரங்களின் சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.
4) சம்பந்தர் கையாண்ட பண்களில் பத்துப் பண்களையும் அப்பண்ணிற்குரிய தேவாரங்கள் ஒவ்வொன்றையும் குறிப்பிடுக.

## "இ" பகுதி

**பின்வரும் இராகங்களை இனங்கண்டு இரண்டினைத் தெரிவு செய்து அவற்றின் இலட்சனங்களை விரிவாகத் தருக? (உருப்படிகள், சஞ்சாரங்கள், எழுதப்படல் வேண்டும்)**

*04.* *1)* கபநிஸ் – நிபகா – கரி – ஸரிகபநிஸா

*2)* ஔடவ வக்ர சம்பூர்ணராகம்

*3)* ஹமீர் கல்யாணி

*4)* பஞ்சம வர்ஜராகம்

*05.* கர்நாடக இசை, மேலைத்தேய இசை என்பவற்றிற்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை பின்வரும் விடயங்களின் அடிப்படையில் ஆராய்க.

*1)* ஸப்தஸ்வரங்களும் அவற்றின் பெயர்களும்

*2)* லிபி முறை

*3)* கச்சேரி முறை

*4)* தாளம்

*06.* *1)* ஹிந்துஸ்தானி இசையில் வழக்கத்திலுள்ள உருப்படிகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

*2)* ஹிந்துஸ்தானி இசையிலிருந்து கர்நாடக இசைக்கு வந்த இராகங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

*3)* ஹிந்துஸ்தானி இசையின் பத்து தாட்களையும் குறிப்பிட்டு அவற்றிற்கு ஒப்பான கர்நாடக சங்கீத இராகங்களையும் எழுதுக.

*07.* சிறுகுறிப்பு எழுதுக.

*1)* திரிதால்

*2)* வர்ஜராகம்

*3)* ஸ்வர சாகித்தியம்

*4)* பஞ்சமாந்தியராகம்.

*08.* *1)* "முவ்வ கோபால்" என்னும் முத்திரையையுடைய வாக்கேயகாரர் யார்?

*2)* அவர் இயற்றிய இரண்டு பதங்களைக் குறிப்பிடுக.

*3)* அவர் கையாண்ட அபூர்வ இராகங்கள் இரண்டினைக் குறிப்பிடுகு.

*4)* மேலே குறிக்கப்பட்ட வாக்கேயகாரர் போன்று தமிழில் பதங்கள் இயற்றியவாக்கேயர் மூவரைக் குறிப்பிடுக.

*5)* "முவ்வ கோபால்" என்னும் முத்திரையைக் கையாண்ட வாக்கேயகாரரின் இசைத்தொண்டினையும் இசைச்சிறப்பினையும் எழுதுக.